**அ.வ.எண்.93/2024**
**பி.வா.சா.1 : வெள்ளைச்சாமி**
**தேதி : 21.11.2025**
**சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,**
**2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

இல்லை.

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை:-**

எனக்கு ஒரு மகன், இரண்டு மகள்கள். ஒரு மகள் இளவராக இருக்கம்போதே இறந்துவிட்டார். என் மகள் வாதி பாகம் கேட்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா பி அட்டவணை சொத்தினை வாதிக்கு கொடுப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை அது பூர்வீக சொத்து. பி அட்டவணையில் கண்டுள்ள சொத்துக்களை தவிர ஆளம்பாடி கிராமத்தில் வேறு சொத்துக்கள் இல்லை. ஆளம்பாடி கிராமத்தில் உள்ள சொத்துக்களை நானும் என பங்காளிகளும் பாகம் பங்கிட்டு கொண்டோம். அந்த பாகத்தில் வந்தது தான் ஆளம்பாடி கிராம சொத்துக்கள் என்று சொன்னால் எனக்கு தெரியாது. நீங்கள் 4, 5 வழக்குகள் நீதிமன்றதில் நடத்தியுள்ளீர்களா என்றால் இல்லை. தாவா பிச்சம்பட்டியில் உள்ள சொத்து நான் 1976 ல் வாங்கிய சொத்தை விற்று பிச்சம்பட்டி சொத்தை வாங்கினேன். மேலும் ஆடுமாடுகளை விற்றும் மேற்படி சொத்தை வாங்கினேன். உங்களுக்கு தொழில் விவசாயம் என்ற சொன்னால் சரியல்ல ஆடு மாடு தான் என் தொழில். 2003 பாகப்பிரிவினை பத்திரத்தில் எனக்கு 25000 ரூபாய் பணம் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது ஆனால் எனக்கு 25000 ரூபாய் பணம் எதுவும் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.4 1976 ல் வாங்கிய சொத்துக்குரிய ஆவணம். சர்வே எண்.424/1பி அதில் 4 ஏக்கர் 47 செண்ட் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் மேலும் 582-ல் 18.36 செண்ட்ஸ் என்று உள்ளது என்றால் சரிதான். ஆக மொத்தம் 4 ஏக்கர் 72 செண்ட் என்று

சொன்னால் சரிதான். ஆலம்பாடி கிராமத்தில் சர்வேஎண். 580/1ஏ, 1பி, 2ஏ, 2எப், 2ஐ, 424/7, 425/2ஏ, 429/1பி, 430/4, 434/3 ஆகியவை ரங்கசாமி வகையறாவுக்கு பாத்தியப்பட்ட பூமிகள் உள்ளது என்று சொன்னால் அது பற்றி தெரியாது. இவை அனைத்தும் பூர்வீக சொத்து என்பதால் நீங்கள் தெரியாது என்று பதிலளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணம் 05.06.2003ல் பொன்னுசாமிக்கு கிரையம் செய்து கொடுத்தது தான் நீங்கள் வாங்கிய சொத்து என்றால் சரிதான் அது என்னுடைய தனிப்பட்ட சொத்து ஆகும். ஆலம்பாடி கிராமத்தில் 1976ல் ஒரு சொத்து மட்டும் தான் வாங்கியுள்ளேன் வேறு எந்த சொத்தும் வாங்கவில்லை. சர்வே எண்.424/7 –ல் 4 ஏக்கர் 72 செண்ட் விற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன சொத்து பூர்வீக சொத்து என்றும் அதனை நீங்களும் உங்கள் மகனும் விற்றுள்ளீர்கள் என்றால் சரியல்ல. மேற்சொன்ன சொத்தை 6 லட்ச ரூபாய்க்கு விற்றேன். 2003 ஆம் ஆண்டில் பாகக்கறார் செய்த காலத்தில் உங்கள் மகள்கள் இளவர்கள் என்று சொன்னால் சரிதான். மேற்சொன்ன காலகட்டத்தில் உங்கள் குடும்பத்திற்கு நீங்கள் தான் தலைவர் என்று சொன்னால் என் குடும்பத்திற்கு மட்டும் தான் நான் தலைவர். 04.06.2003ஆம் தேதியில் பழனியம்மாளுக்கு ஒரு கிரையமும், பாக்கியத்தம்மாளுக்கும் தனித்தனியாக கிரையம் செய்து கொடுத்தீர்களா என்றால் எனக்கு தெரியாது. நீங்கள் அவ்வாறு நிறைய கிரையம் செய்ததால் பொதுக்குடும்ப சொத்திலிருந்து நிறைய வருமானம் உங்களுக்கு வந்தது என்றால் சரியல்ல. வழக்கிற்கு பின்னிட்டு நீங்கள் பி.வா.சா.ஆ.10 மூலம் நீங்கள் செட்டில்மெண்ட் செய்து வைத்தது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. என் மகனுக்கு செட்டில்மெண்ட் எழுதிவைத்ததை சார்பதிவாளர் அசல் பத்திரம்

இல்லாததால் அனுப்பி விட்ட காரணத்தினால் நான் உயர்நீதிமன்றம் சென்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான் பத்திரம் பதியமாட்டேன் என்ற சார்பதிவாளர் சொல்லிவிட்டதால் அதோடு விட்டுவிட்டேன். நீங்கள் பொதுக்குடும்ப சொத்தை பதிவு செய்ததால் அது செல்லாது என்று சொன்னால் சரியல்ல. கூட்டுறவு வங்கியில் ஆடு, மாடு வாங்குவதற்காக நான் சொத்துக்களை வைத்து அடமானக் கடன் பெற்றிருந்தேன். வாதி தாவா சொத்துக்களில் உங்களுடன் கூட்டு அனுபவித்தில் இருந்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்களில் வாதிக்கும் சட்டப்படி சொத்தில் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் புதியதாக நான் ஒரு வீடு கட்டியுள்ளேன். நீங்கள் சொல்வது தவறு என்றும் உங்கள் மகள் தான் தாவா சொத்தில் அந்த வீட்டை கடன் வாங்கி கட்டியுள்ளார் என்று சொன்னால் சரியல்ல. வாதி வீடு கட்டுவதற்கு நீங்கள் தான் இடத்தை பிரித்து கொடுத்து அஸ்திவாரம் தோண்டியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் உங்கள் மகனுடன் இருந்து கொண்டு வாதிக்கு தொந்தரவு செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவாப்படி வாதிக்கு தாவா சொத்தில் பங்கு உண்டு என்றும் தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2025.11.21 18:40:56 +0530

மாவட்ட நீதிபதி,
கரூர்.